**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**<u>ஆணை நாள்: 18.09.2019 (முற்பகல்)</u>**

**<u>முன்னிலை</u>**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**<u>வழக்கு எண்.SA 7951/E/2018</u>**

திரு P.பாண்டி செல்வராஜ் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605. ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 31.07.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 15.09.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 24.10.2018 |

******

**<u>ஆணை</u>**

இன்று (18.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு P.பாண்டி செல்வராஜ் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி நா.சசிகலா, தலைமையிடத்துத் துணை

வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 31.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து P.பாண்டி செல்வராஜ் என்பவரது புகாரின் அடிப்படையில் அனுப்பப்பட்ட 29.12.2017 நாளிட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுக்கக் குறிப்பாணை கிடைக்கப் பெற்றது பற்றிய விபரம், மேற்படி குறிப்பாணை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய தகவல், காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் கோட்ட அலுவலர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட 20.06.2018 நாளிட்ட குறிப்பாணை கிடைக்கப் பெற்றது பற்றிய விபரம், மேற்படி குறிப்பாணை மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய தகவல் என 4 இனங்களில் தகவல் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வாலாஜாபாத், காஞ்சிபுரம் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை அனுப்புமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 15.09.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையிட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், வாலாஜாபாத், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 24.10.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (18.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகி, தான் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்படாததால், சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவும், சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவும் தாக்கல் செய்துள்ளதாகவும், இதுநாள்வரைப் பொது அதிகார அமைப்பினரால் முழுமையான தகவல் தனக்கு வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை முழுமையாக வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் தனது வாதுரையை ஆணையத்தின் முன்பு எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தான் மேற்படி பணியில் பொறுப்பேற்று மூன்று நாட்கள்தான் ஆகிறதென்றும், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை 3 வார காலத்திற்குள் மேல்முறையீட்டாளருக்கு வழங்குவதாகவும் ஆணையத்தின் முன்பு எழுத்துமூலமாகத்

தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 31.07.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை இனம்வாரியாக, முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 3 வார காலத்திற்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற 5 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 7951/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வாலாஜாபாத் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 631 605.

**<u>மனுதாரர்</u>**

திரு P.பாண்டி செல்வராஜ்,
பிளாட் நெ.89, A.V.S. மெயின் ரோடு,
அன்னை நகர்,
கொரட்டூர்,
சென்னை - 600 076.

Copy to: Judgement File.
24/09/19